மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. சி. ஞானசேகரன்.*

திரு. சி. ஞானசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினருடைய தொகுதி மேம்பாட்டு நிதியைப்பற்றி நாங்கள் பல பேர் அவையிலே ஏற்கெனவே பேசி இருக்கிறோம். நேற்று ஒரு ஜி.ஓ. பிறப்பிக்கப்பட்டு இருக்கிறது; ஜி.ஓ. 26-ல்..*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *ஏற்கெனவே என்னுடைய அறையில் பேசிவிட்டீர்கள்; முடிந்தது அந்தப் பிரச்சினை. (குறுக்கீடு) அப்புறம் பேசுவோம்; உட்காருங்கள். திரு. பரிதி சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)*

திரு. சி. ஞானசேகரன்: *மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதுபற்றி பதில் சொல்லட்டும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *கவன ஈர்ப்பாக எடுத்துக் கொள்வோம். திரு. பரிதி.*

(ஆ) கரூரில் தி.மு.க. இளைஞர் அணி உறுப்பினர் கோவிந்தராஜன் கொலை

திரு. பரிதி இளம்வழுதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 11 ஆம் தேதி கரூரில் அரசு காலனியில் எங்கள் கட்சியினுடைய இளைஞர் அணித் தோழர் கோவிந்தராஜன் அவர்கள் கொடூரமான முறையிலே கொலை செய்யப்பட்டு இருக்கிறார்..*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அது என் ஆய்வில் இருக்கிறது. திரு. எ.வ. வேலு..*

(இ) விவசாயத் தொழிலாளர் நல வாரியம்

***திரு. எ.வ. வேலு**: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 12-3-2002-அன்று விவசாயத் தொழிலாளர்கள் நல வாரியம் குறித்து விதி 55-ன்கீழ் கவன ஈர்ப்பு அறிவிப்பு.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அது என் ஆய்வில் இருக்கிறது. திரு. வேல் முருகன்.*

(ஈ) பண்ருட்டி தொகுதியில் 54 உயிர்கள் பலியானது

திரு. தி. வேல் முருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் 54 உயிர்கள் பலியாகி இருக்கின்றன. அது சம்பந்தமாக ஒரு சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானம்...*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS